DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV BHARATIYA NAGARIK SURAKSHA SANHITA)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SENDAMANGALAM

C.C.No.350/2025

PW - 8

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர். நவீன்குமார் (Lw - 12) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(1** முதல் **4** எதிரிகள் ஆஜர் **5**ம் எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

முதல் விசாரணை **Date : 24.07.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 12.04.2025ந் தேதி இரவு 08.39 மணிக்கு நாமக்கல், அரசு மருத்துவகல்லூரி மருத்துவமணையில் பணியிலிருந்தேன்.

அப்போது ஞானமூர்த்தி என்பவர் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் வந்தார். ஞானமூர்த்தியை விசாரித்த போது அவரை 12.04.2025ந் தேதி மாலை 03.00 மணியளவில் தனது தோட்டத்தில் வைத்து தெரிந்த 6 நபர்கள் மரகுச்சி மற்றும் கல்லால் தாக்கியதாக கூறினார்.

அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு உதடு பகுதியில் சிறாய்ப்பு காயம் இருந்தது. மேலும் அவர் தனக்கு தலையில் அடிப்பட்டதாக கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கியதில் அவருக்கு மேல்முன் பக்க பல் உடைந்து கீழே விழுந்து இருந்தது.

ஞானமூர்த்திக்கு நாமக்கல் அரசு மருத்துவமணையில் வழங்கப்பட்ட சிகிச்சை குறித்த

ஆவணங்களின் படி அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். **(**நாமக்கல் அரசு மருத்துவ கல்லூாி மருத்துவமனை விபத்து பதிவேடு அ**.**சா**.**ஆ**.7** ஆகவும்**,** காயச்சான்றிதழ் அ**.**சா**.**ஆ**.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலீசாா் என்னை விசாாித்தாா்கள்.

<u>எதிாி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் காயம்பட்ட நபா் என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது சுயநினைவுடன் தான் இருந்தாா் என்றால் சாிதான். அவா் தன்னை யாா் தாக்கினாா்கள் என பெயா் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சாிதான். அவருக்கு நான் சிகிச்சை வழங்கியபோது அவருடைய தோல்பட்டையிலே, அடிவயிற்றிலோ அல்லது சிறுநீரக பையிலோ காயம் எதுவும் இல்லை என்றால் சாிதான். ஆனால் காயம்பட்ட நபா் தனக்கு தலை மற்றும் வயிற்று பகுதியில் அடிபட்டதாக கூறினாா். மேற்படி நபருக்கு தலை மற்றும் அடிவயிற்று பகுதியில் காயம் எதுவும் காணப்படவில்லை என்றால் வெளிகாயம் எதுவும் காணப்படவில்லை.

போலிசாா் என்னை விசாாித்தபோது சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்களை காட்டி விசாாிக்கவில்லை என்றால் சாிதான். இவ்வழக்கில் வாதிக்கு சி.டி.ஸ்கேன் அல்லது எக்ஸ்ரே எடுக்கப்பட்டதா என்றால் அவா் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட சிகிச்சையில் இருந்தபோது எடுக்கப்பட்டிருக்கும். மேற்படி எக்ஸ்ரே சி.டி.ஸ்கேனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சாிதான். காயம்பட்டதாக சொல்லப்படும் நபா் தொடா்சிகிச்சையில் எத்தனை நாட்கள் இருந்தாா் என்றால் 5 நாட்கள் இருந்தாா். காயம்பட்டதாக சொல்லப்படும் நபா் போலிசாா் விசாரணையிலும் நீதிமன்றத்திலும் தான் 20 நாட்கள் நாமக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததாக சொல்லி இருப்பது தவறு என்றால் சாிதான். காயம்பட்டதாக சொல்லப்படும் நபா் வேறு தனியாா் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தொியாது.

காயம்பட்டதாக சொல்லப்படும் நபருக்கு கொடுங்காயம் ஏற்பட்டது என ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாிதான். அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டில் வாதி ஞானமூா்த்திக்கு பல் உடைந்துவிட்டதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சாிதான். மேற்சொன்ன ஞானமூா்த்திக்கு ஏற்பட்ட காயங்கள் அவா் குடிபோதையில் வாகனம் ஓட்டி சென்று கீழே விழும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சாிதான்.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**